ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ    அதி விசேஷமானது
අංක 2368/17 - 2024 ජනවාරි මස 23 වැනි අඟහරුවාදා - 2024.01.23
2368/17 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 104/44* (VI)(A)

**(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம்**

*114 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*பின்வரும் பெயர்களைக் கொண்ட "பெண்களின் கல்வி மற்றும் ஆய்வு மைய நம்பிக்கைப் பொறுப்பு" இன் நம்பிக்கைப் பொறுப்பாளர்களான -*

1. டாக்டர் நவமணி செல்வி திருச்சந்திரன்;
2. டாக்டர் விசாகா குமாரி ஜயவர்த்தன;
3. பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க; அத்துடன்
4. சூளனி கொடிகார.

*ஆகியோர் (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ் தமது கூட்டிணைப்பிற்காக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சருக்கு விண்ணப்பித்து உள்ளார்களாதலால்,*

*மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் கூட்டிணைப்பிற்கு அதிகாரமளித்து-*

*(அ) கொழும்பு, பிரசித்த நொத்தாரிசு துளசிகா நீலகண்டனால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆந் திகதியிடப்பட்ட 4 ஆம் இலக்கத்தைக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்தலின் கீழ் முறையாக நியமிக்கப்பட்ட மேலே பெயரிடப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்களும் அவர்களது அடுத்துறுநர்களும் "பெண்களின் கல்வி மற்றும் ஆய்வு மைய நம்பிக்கைப் பொறுப்பு" எனும் பெயர் மகுடத்தின் கீழ் பொது*

1A – G 41310 – 07 (2024/01)
*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலச்சினையையும் இடையறாவழியுரிமையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் எனவும்;

(ஆ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சொல்லப்பட்ட பெயர் மகுடத்தின் கீழ், சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் சார்பில் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம், பெறலாம், வைத்திருக்கலாம், குத்தகைக்கு எடுக்கலாம் அல்லது வேறு வகையில் கொள்ளலாம், விற்கலாம், கொடுத்து மாற்றலாம், ஈடுவைக்கலாம், அடமானம் வைக்கலாம், குத்தகைக்குக் கொடுக்கலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாம் எனவும், அத்துடன்

(இ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சொல்லப்பட்ட பெயர் மகுடத்தின் கீழ், சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புத் தொடர்பில் எழுகின்ற எல்லா வழக்குகளிலும் வழக்கு நடவடிக்கைகளிலும் இலங்கையில் உள்ள அல்லது வேறு எங்கேனும் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கும் வழக்குத் தொடுக்கப்படுவதற்கும் விடையளிப்பதற்கும் விடையளிக்கப்படுவதற்கும், எதிர்வாதிடுவதற்கும் எதிர்வாதிடப்படுவதற்கும் சட்டத்தில் இயன்றவர்களாகவும் தகுதிவாய்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும் எனவும்;

பணித்து வெளிப்படுத்துகின்றேன்.

இக்கட்டளையானது இல்லாதொழிக்கப்படலாம் அல்லது அவசியமென எனக்குத் தோன்றுகின்றவாறான அத்தகைய முறையில் காலத்துக்குக்காலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ,
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

கொழும்பு,
*2024*, சனவரி *18*.

EOG 01 - 0205

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.